(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 89.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, மே 05, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0286/ '10

1\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் கீழ்வரும் திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றையும்,

(ii) மேற்படி அமைச்சின் தற்போதைய மொத்தச் செலவினத்தை மாத மற்றும் வருட வாரியாகவும்,

(iii) நிரந்தர பணியாள் தொகுதியின் எண்ணிக்கையையும் அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த மொத்த ஊதியங்களையும்,

(iv) உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அவர்களின் பணியாள் தொகுதியினர் ஆகியோருக்கான மாதாந்த மொத்தச் செலவினத்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0293/ '10

2\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(5)

(அ) (i) 2006 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதற்கமைய, 9 மீற்றர் நீளமான 21000 மரத்தூண்களும் 10 மீற்றர் நீளமான 3400 மரத்ததூண்களும் கொள்வனவு செய்வதற்காக விலை கோரப்பட்டது என்பதையும்,

(ii) குறைந்தபட்ச விலைகளைச் சமர்ப்பித்த அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும்,

(iii) இரண்டாவதாக குறைந்தபட்ச விலைகளை சமர்ப்பித்த தென்னாபிரிக்க நிறுவனத்திற்கு கேள்விப் பத்திரம் அளிக்கப்பட்டதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) எவ்வாறாயினும், 9 மீற்றர் நீளமான 10500 மரத்தூண்களும் 10 மீற்றர் நீளமான 1700 மரத்தூண்களும் கொள்வனவு செய்யப்பட்டதென்பதையும்,

(ii) இதில் தென் மாகாணத்திற்கு விநியோகிக்கப்பட்ட 2363 தூண்களில் 73 தூண்கள் மட்டுமே பாவனைக்கு எடுக்கப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கூறிய கேள்விப் பத்திரத்தை அளிக்காமை யினால் ரூபா 79.5 மில்லியன் நட்டம் ஏற்பட்டதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அந்த நட்டம் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டியவர்களின் பெயர்கள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0756/ '10

3\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது ஆசிரியர் பணியில் ஈடுபட்டிருக்கும் கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய கற்பித்தல் டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கையையும்,

(ii) மேற்படி கற்பித்தல் டிப்ளோமாதாரிகளில் கலைமானிப் பட்டம், விஞ்ஞானமானிப் பட்டம், பட்டப்பின்படிப்பு மற்றும் முதுகலைமானிப்பட்டம் ஆகிய பட்டக் கற்கை நிலைகள் வரை உயர்கல்வி பயின்றுள்ளவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) பெற்றுக் கொண்டுள்ள பட்டப்படிப்புகளுக்கமைய ஆசிரியர் சேவையின் அந்தந்த தரங்களுக்கு கற்பித்தல் டிப்ளோமாதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் பணியாற்றும் கற்பித்தல் டிப்ளோமாதாரி ஆசிரியர்கள் பட்டம் பெற்றிருப்பார்களானால், இவர்களின் நியமனங்களை பட்டதாரி ஆசிரியர் நியமனங்களாக கருதி ஆசிரியர் சேவையில் உரிய தரங்களில் அமர்த்துவதற்கான சுற்றுநிருபமொன்று மேற்படி மாகாண சபையினால் வெளியிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) ஏனைய கற்பித்தல் டிப்ளோமாதாரிகள் பெற்றுள்ள பட்டப்படிப்புகளுக்கமைய ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0811/ '10

4\.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய கொட்டபொல கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்களையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்களையும்,

(v) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0860/ '10

5.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கல்வி அமைச்சரினால், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படுகின்றதா என்தையும்,

(ii) குறித்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் மாவட்ட மற்றும் கல்வி வலய ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்,

(iii) இதன்பொருட்டு நிதி வழங்கும் உள்நாட்டு அல்லத வெளிநாட்டு நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(iv) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் நாளொன்றுக்கு ஒரு மாணவனுக்கு ஒதுக்கப்படும் பணத்தொகை மற்றும் வழங்கும் உணவு யாது என்பதையும்,

(v) இந்த நிகழச்சித் திட்டம் பாடசாலை மட்டத்தில் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித் திட்டதின் கீழ், பாடசாலைகளுக்கு உணவு வழங்குகின்ற அநேகமான கல்வி வலயங்களில் உணவு வழங்குநர்களுக்கு உரிய முறையில் பணம் செலுத்ததப்படவில்லை என்பதையும்,

(ii) உணவு வழங்குநர்களுக்கு பணம் செலுத்துவது தாமதமாயுள்ளதால் இவர்களுக்கு அநீதி நேர்த்துள்ளதென்பதையும், இதனால் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தடை ஏற்படுவதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி உணவு வழங்குநர்களுக்கு இறுதியாக பணம் செலுத்தியுள்ள மாதம் யாதென்பதையும்,

(ii) தற்போது இவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள நிலுவைத் தொகை அந்தந்த மாவட்டங்கள் மற்றும் கல்வி வலய ரீதியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0905/ '10

6.

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றிய ஆங்கில ஆசிரியர்களுக்கு இரு கட்டங்களில் (அ.நி.சுற்றறிக்கை இல. 13 /2005 மற்றும் 21 / 2006 இன் கீழ் ) நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவென்பதையும் ,

(ii) மேற்படி அ.நி. சுற்றறிக்கையின் படி கல்வி அமைச்சசின் செயலாளரது ED / 2 / 29 / 4 / 1 / 46 ஆம் இலக்க 2005 / 7 /19 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் படி, 2005/7/28 ஆம் திகதி முதல் மேற்படி ஆசிரியர்களில் ஒரு சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், 2003 – 2004 ஆண்டுகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றுகின்ற சுமார் 50 ஆசிரியர்களுக்கு இது வரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை, அக்கறைப்பற்று மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்,

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிரிப்பு, கல்குடா மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்

துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

1003/ '10

7.

கௌரவ சாந்த பண்டார,— மின்வலு , எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய தேசிய மின்சக்தித் தேவை நாளாந்த, மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் தனித் தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) 2005 ஆம் ஆண்டு வரை தேசிய மின்சக்தி முறைமைக்கு பங்களிப்புச் செய்துள்ள மின்சாரத்தின் அளவு யாதென்பதையும்,

(iii) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை தேசிய மின்சக்தி முறைமையில் புதிதாக சேர்ப்பதற்கு முடியுமாயிருந்த மின்சக்தியின் அளவு எவ்வளவு மெகாவொற்கள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலக்கரி மற்றும் நீர் மின் நிலையங்களின் மூலமாக எதிர்காலத்தில் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மின்சக்தியின் அளவு எவ்வளவு மெகாவொற்கள் என்பதையும்,

(ii) மேற்படி புதிய மின்சார உற்பத்தியின் மூலமாக தேசிய மின்சாரத் தேவை பூர்த்தி செய்யப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1059/ '10

8.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் கமநல சேவைகள் ஆளுகைப் பிரதேசத்துக்குரிய ஸ்கந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு உரிய காலத்தில் உர மானிய நிவாரணத் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற உரம் வழங்கப்படவில்லை என்பதையும்,

(ii) நெல் விதைக்கப்பட்டு 60 நாட்கள் கடந்திருந்தும் 35-45 நாட்களுக்குள் இடப்படவேண்டிய இரண்டாம் கட்ட உரம் முழுமையாக இவர்களுக்கு வழங்கப்படவில்லையென்பதையும்,

(iii) இந்நிலைமையின் கீழ் தமது பயிர்களுக்கு உரமிடும் விடயத்தில் விவசாயிகள் பாரிய கஷ்டங்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு இலகுவான விதத்தில் நிவாரண அடிப்படையில் வழங்கப்படும் உள்ளீடுகளை உரிய காலத்தில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0287/ ’10

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீள்குடியேற்ற அமைச்சின் கீழ்வரும் திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றையும்,

(ii) மேற்படி அமைச்சுக்கான தற்போதைய மொத்தச் செலவினத்தை மாத மற்றும் வருட வாரியாகவும்,

(iii) நிரந்தர பணியாள் தொகுதியின் எண்ணிக்கையையும் அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த மொத்த ஊதியங்களையும்,

(iv) மீள்குடியேற்ற அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அவர்களின் பணியாள் தொகுதியினர் ஆகியோருக்கான மாதாந்த மொத்தச் செலவினத்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0812/ ’10

10.

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் கொட்டபொல கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0861/ ’10

11.

கௌரவ அஜித் குமார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி - மாத்தறை புகையிரத வீதியை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படும் பணிகள் யாவையென்பதையும்,

(iii) இக்கருத்திட்டத்திற்கு நிதி வழங்கும் நாடு அல்லது நிறுவனம் யாதென்பதையும்,

(iv) வழங்கப்படும் அந்நிதி ஒரு கடனா அல்லது உதவியா என்பதையும்,

(v) அது ஒரு கடன் எனில், அதற்குரிய வட்டி, மீள செலுத்த வேண்டிய கால எல்லை மற்றும் நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டம் தொடர்பாக,

(i) கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்,

(ii) நிறைவு செய்வதற்காக ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் யாரெஎன்பதையும்,

(iii) ஆலோசகர்களாக பணியாற்றுவோர் யாவர் என்பதையும்,

(iv) மேற்பார்வை செய்யும் நிறுவனம் யாதென்பதையும்,

(v) நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் துணை ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள், விலாசங்கள் மற்றும் இவர்களுக்குரிய துணை ஒப்பந்தப் பணியின் தன்மைகளும் அதன் பெறுமதிகளும் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தில் இந்தியாவின் அல்லது வேறு நாட்டின் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்தையும்,

(iii) ஆமெனில், இவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0977/ ’10

12.

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கல்வி அமைச்சினால் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும் ,

(ii) இப்பாடசாலைகளில் முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் தோட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியே யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் தனித்தனியே யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

1004/ '10

13.

கௌரவ சாந்த பண்டார,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகநெகும திட்டத்தின் கீழ் கொங்ரீட் கற்கள் இடப்பட்டு வீதி அபிவிருத்தி செய்யப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறான கருத்திட்டங்களுக்காக 2010 ஆம் ஆண்டில் குருணாகல் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) அதன் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளின் நீளம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1020/ '10

14.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கையில் அறிக்கையிடப்பட்ட குருதிச்சோகை என்னும் போஷாக்கின்மையினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் சதவீதம் எவ்வளவென்பதையும்,

(ii) குருதிச் சோகையினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் சமுதாயத்தினரை இந்நிலைமையிலிருந்து மீட்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி நடவடிக்கைகள் குருதிச்சோகைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் போதுமானதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1087/ '11

15.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மின்வலு, எரி சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடல் அலைகளின் சக்தியை மின்வலு உற்பத்திக்கான மூலமாக பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுக் கற்கை ஏதும் இதுவரை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) கடல் அலைகளின் சக்தியை ஏனைய மீள் பிறப்பாக்கி எரி சக்தி மூலங்களுடன் போட்டி அடிப்படையில் பயன்படுத்தக் கூடிய சாத்தியப்பாடுகள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2011 ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப் படுமாக.

* 2.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 3.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 4.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

கடல்கடந்த ஊழியார்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சர்,— விலங்குச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குச் சட்டத்தின் 3, 3அ அ, 11, 26 மற்றும் 34 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 35 ஆம் பிரிவின் கீழ் கால்நடை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009, நவெம்பர் மாதம் 26 ஆம் திகதிய 1629/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.04.05ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்— “1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935 )

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0181/ '10

1.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0182/ '10

2.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பலந்தொட்ட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா வென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங் களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0183/ '10

3.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சூரியவெவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு/நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதிலிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0184/ '10

4.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா வென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு/நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதிலிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0185/ '10

5.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) லுனுகம்வெஹெர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு/நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0186/ '10

6.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திஸ்ஸமகாராம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு/நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?